## தாமான் ஸ்ரீ சினார் சமூக மண்டபம்

# நிர்வாகத்தை மாநகர் மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## குடியிருப்போர் ஆதரவு

எல்.கே. ராஜ்

சிகாம்புட், ஆக. 11-
தாமான் ஸ்ரீ சினார், சிகாம்புட்டில் உள்ள ஒரு சமூக மண்டபத்தின் நிர்வாகத்தை கோலாலம்பூர்



மாநகர் மன்றமும் கூட்டரசுப் பிரதேச நிலச் சுரங்கத்துறை அலுவலகமும் ஏற்று நடத்த அங்கு வசிக்கும் மக்கள் ஆதரவு தெரிவித்திருக்கின்றனர்.
அந்தச் சமூக மண்டபத்தைப் பயன்படுத்துவதில் இருந்து தங்களுக்குத் தடை விதிக்கப்படுவதாக அங்கு வசிக்கும் மக்களிடம் இருந்து புகார்களைப் பெற்றுள்ளோம் என தாமான் ஸ்ரீ சினார் குடியிருப்போர் சங்கத்தின் தலைவர் புடி ஹார்டி சபே தெரிவித்தார்.
சில குறிப்பிட்ட தரப்பினர் அந்தச் சமூக மண்டப நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டதால் அதன் வசதிகளைப் பயன்படுத்துவதில் இருந்து அங்கு வசிக்கும் மக்களுக்குத் தடை விதிக்கப்படுகிறது என்று புகார் கிடைத்தது என்று அவர் கூறினார்.

அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் நிகழ்ச்சிகளை நடத்தினாலும் அந்தச் சமூக மண்டபத்தில உள்ள கழிப்பறைகளைப் பயன்படுத்த தங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை எனவும் அவர் கூறினார்.அந்தச் சமூக மண்டபமும் அதன் அருகில் உள்ள கட்டடமும் வர்த்தகத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

அதனைப் பயன்படுத்தும் பொதுமக்களுக் குக் கட்டணம் விதிக்கப்படுகிறது என்று அவர் மேலும் சொன்னார்.
இதனால் சமூக நிகழ்ச்சிகளை சாலையோரம் நடத்த வேண்டிய நிலை உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.